




# கொண்டாடி மகிழ்வோம்

விழாக்கள் என்றவுடன் நம் நினைவில் வருபவை புத்தாடை, சுவையான உணவு, உறவினர், நண்பர்கள் வருகை போன்றவை ஆகும். அவை பெரும்பாலும் நாடு, பருவகாலங்கள் மற்றும் மதத்துடன் தொடர்புடையன. மக்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கும் இணைப்புப் பாலமாக விழாக்கள் விளங்குகின்றன.



விழாக்கள் மனிதகுலத்தின் நீண்டகாலப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகும். பெருமையும், பழமையும், பாரம்பரியமும் மிக்கது நம் இந்தியா. இங்குப் பல விதமான விழாக்கள் மக்களால் கொண்டாடப்படுகின்றன.



## தேசிய விழாக்கள்






நமது நாட்டு மக்களாலும், அரசாலும் ஒருங்கிணைந்து கொண்டாடப்படும் விழாக்கள் தேசிய விழாக்கள் ஆகும். இவ்விழாக்கள் தேசத் தலைவர்கள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள் நம் நாட்டு மக்களிடையே ஒற்றுமை, ஒருமைப்பாடு, தேசப்பற்று மற்றும் சகோதரத்துவத்தை வளர்க்க உதவுகின்றன.

### சுதந்தர தினம்


நாம் ஆங்கிலேயர்களிடமிருந்து கி.பி.1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் விடுதலை பெற்றோம். ஒவ்வொரு ஆண்டும் அந்நாளை நாம் சுதந்தர தினமாகக் கொண்டாடுகிறோம். இந்நாளில் பாரதப்பிரதமர் புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் தேசியக்கொடியேற்றிச் சிறப்புரையாற்றுவார். மாநிலங்களில் முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைப்பர்.



சுதந்தர தினத்தன்று அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகளில் தேசியக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுவார்கள். பள்ளிகளில் நாட்டுப்பற்றை வளர்க்கும் கலை நிகழ்ச்சிகள் நடத்துப்படுகின்றன.

## குடியரசு தினம்


இந்திய அரசியலமைப்புச்சட்டம் கி.பி 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இந்நாளை நாம் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம். இந்நாளில் நமது குடியரசுத்தலைவர் தேசியக் கொடியேற்றிச் சிறப்புரையாற்றுவார். இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார். அப்போது ஒவ்வொரு மாநிலங்களின் சாதனைகளையும், பெருமைகளையும் விளக்கும் அலங்கார அணிவகுப்புகள் நடைபெறும். மாநிலங்களில் ஆளுநர்கள் கொடியேற்றிச் சிறப்புரையாற்றுவர்.



## காந்தி ஜெயந்தி

தேசத் தந்தை மகாத்மா காந்தி கி.பி 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் பிறந்தார். அந்நாளைக் காந்தி ஜெயந்தியாகக் கொண்டாடுகிறோம். அவர் நம்





நாட்டுக்கு ஆற்றிய தொண்டையும், கொள்கைகளையும் நினைவு கூரும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.



## சமயத்திருவிழாக்கள்



### தீபாவளி


இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா தீபாவளி ஆகும். தென் இந்தியாவில் நரகாசுரன் என்ற அசுரன் அழிந்த நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. அந்நாளில் மக்கள் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடைகள் அணிவர். தீபங்கள் ஏற்றி, பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுகின்றனர். இனிப்புகளை வழங்கி வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வர். தீபாவளியன்று மகிழ்ச்சியும் வளமும் பெற மக்கள் இறைவனை வணங்குவர்.






**தீபாவளி= தீபம் + ஆவளி, தீபங்களின் வரிசை எனப் பொருள்படும்.**

### ரமலான் (ஈகைத் திருநாள்)



இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதம் ரமலான் மாதம் ஆகும். இம்மாதத்தின் முதல் பிறை நிலவு, வானில் தோன்றும் நாளில் இருந்து அடுத்த மாதத்தின் பிறை தோன்றும் நாள் வரை இஸ்லாமியர்கள் நோன்பு கடைப்பிடிப்பர். இந்த நோன்பின் நோக்கம் ஒழுக்கம் மற்றும் சுயக் கட்டுப்பாட்டினை வளர்ப்பதாகும். நோன்புக் காலத்தில் பகல் பொழுதில் நீர், உணவு இன்றி நோன்பு இருப்பர். பிறை தோன்றும் நாளை ஈத் என்ற ஈகைத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.



பக்ரீத், மிலாதுன் நபி மற்றும் மொகரம் ஆகியவை இஸ்லாமியர்களின் பிற முக்கிய திருநாள்கள்.

## கிறிஸ்துமஸ்



இயேசு கிறிஸ்து பிறந்த நாளான டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளை அன்பையும், கருணையையும் வலியுறுத்தும் விதமாகக் கொண்டாடுகின்றனர். கிறிஸ்துமஸ் மரம் மற்றும் குடில்கள் அமைத்து விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. நள்ளிரவில் தேவாலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்தவர்கள் இனிப்பு மற்றும் பரிசுப்பொருள்களைக் குழந்தைகளுக்கு வழங்குவார்கள். அனைவரும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வர்.



> இயேசுவைச் சிலுவையில் அறைந்த நாள் புனித வெள்ளியாகக் கொண்டாடப்படுகிறது. அவர் உயிர்த்தெழுந்த மூன்றாம் நாள் ஈஸ்டர் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

## புத்த பௌர்ணமி



வைகாசி மாதம் பௌர்ணமி நாளில் கௌதம புத்தர் பிறந்தார். அந்நாளே புத்த பௌர்ணமி அல்லது புத்த பூர்ணிமா என்று புத்த சமயத்தினரால் கொண்டாடப்படுகிறது.

## மகாவீர் ஜெயந்தி

வர்த்தமான மகாவீரர் பிறந்த நாள் மகாவீர் ஜெயந்தியாகச் சமண சமயத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## குரு நானக் ஜெயந்தி

குருநானக் பிறந்த நாள் சீக்கிய சமயத்தினரால் குரு நானக் ஜெயந்தி எனக் கொண்டாடப்படுகிறது.

- பண்டிகைகள் கொண்டாடப்படுவதன் பின்னணியில் உள்ள காரணக் கதைகளைப் பெரியோர்களிடம் கேட்டு அறிந்து வா.
- உன் வீட்டில் பண்டிகைகள் கொண்டாடப்படும் முறை குறித்து குழுக்களில் கலந்துரையாடு